திரு. காஞ்சி பன்னீர் செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கட்டிடம் கட்டுவதற்கு உதவி புரியும் நன்கொடையாளர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் சீரிய அக்கறையை எடுத்து நடத்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நன்கொடைத் தொகைக்கு வருமான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மைய அரசின் நிதி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தை மத்திய அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டு அதற்குரிய அனைத்து விண்ணப்ப பாரங்களை அனுப்பி வைத்து அரசு ஏற்படுத்தி இருக்கிற தேசிய கமிட்டிக்கு அதை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அந்த வகையில் தமிழக அரசு அனைத்து விண்ணப்ப பாரங்களையும் பூர்த்தி செய்து மைய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. மைய அரசு தான் இதன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 296, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

296—

நிலக்கோட்டையில் ஆதிதிராவிட மாணவிகளுக்கு தொழிற் பயிற்சிப்பள்ளி.

*3871—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நிலக்கோட்டையில் படித்து முடித்த ஆதிதிராவிட மாணவிகள் பயன்பெறும் வகையில் தொழிற் பயிற்சிப்பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1992 மார்ச் 20]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைத் தொகுதியில் பெண்களுக்குத் தனியாக மூன்று மேல்நிலைப் பள்ளிகளும், பாக்கி 9 மேல் நிலைப் பள்ளிகளில் கோ-எஜுகேஷனும் இருக்கிறது. இதிலே படித்து வரக் கூடிய மாணவியர்கள், அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்து, பிறகு பிளஸ் 2 படித்து விட்டு, எதிலேயும் சேர முடியாமல், வேலைக்கும் போக முடியாமல், அவர்கள் கஷ்டப்பட்டு, கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, இதை மறு பரிசீலனை செய்து அங்கே ஐ.டி.ஐ. ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஐ.டி.ஐ. ஆரம்பிக்க வேண்டும் என்றால் அரசுக்கு சுமார் 85 இலட்சம் செலவு ஆகும். இந்த நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு இது போன்ற கருத்துருவை நாங்கள் இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரியிலும், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் வேலூரிலும் ஆதி திராவிடர் பழங்குடி நலத் துறையின் மூலமாக தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க ஆய்வுகள் செய்து, இறுதியில் நிதித் துறையின் ஆலோசனையின் பேரில் கைவிடப்பட்டது. ஆனால், எதிர்காலத்தில் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின் பேரில் இது போன்ற கருத்துரு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இரண்டு இடங்களில் பரிசீலனை செய்து அதைக் கைவிட்டு விட்டதாகச் சொல்லி விட்டார்கள். இப்போது நான் சொன்னதையும் சேர்த்து, மீண்டும் முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி இம்மூன்று இடங்களிலும் ஆரம்பிக்க பரிசீலனை செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா பெயரில் உள்ள ஐ.டி.ஐ.-க்கு மாணவர் விடுதியும் கொடுத்து ரூ. 7.7 இலட்சம் நிதியும் கொடுத்து 1991-92 ஆம் ஆண்டு உதவி செய்து இருக்கிறார்கள். அதே போல், ஆதி திராவிட மக்களின்பால் அன்பு கொண்டுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் நிதி நிலைமையு

அனுசரித்து, முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 297— திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

297—

மீனவர்களுக்கு காலனி வீடுகள்.

*5216— திரு. வ. சத்தியமூர்த்தி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை, பெரிய பட்டினம் ஆகிய கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பெரிய பட்டினம் கிராமத்திலும், கீழக்கரை நகரிலும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு நசிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது அரசின் பரிசீலனைக்கு ஏன் வரவில்லை? அந்தக் கருத்தை ஆய்வு செய்து துறையின் மூலம் பதில் ஏதும் வரப்பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல் மீனவர் துயர் துடைக்கும் பொருட்டு 1975 ஆம் ஆண்டில் இருந்து இதுநாள் வரை சுமார் 180 கடலோர மீனவ கிராமங்களில் 13,862 மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இலவச வீடுகள் கட்டித்தர தேவையான இடத்தை, துறைக்கு மீனவர்கள்